**தெஹியத்தகண்டிய பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெஹியத்தகண்டிய பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டில் சபையினால் தயாரிக்கப்பட்ட 07 வியாபாரக் கொட்டகைகளுக்காக ரூபா 400,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், அச் செலவினம் ரூபா 84,000 ஆக நிலையான சொத்துக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 35,271,561 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், நிலையான சொத்துக்களில் காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் ரூபா 6,983,152 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த 05 வாகனங்களின் பெறுமதி ரூபா 59,719,729 ஆக இருந்த போதிலும், கணக்குகளில் ரூபா 26,000,000 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் வாகனங்களின் பெறுமதி ரூபா 33,719,729 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச சபையினால் 49 புதிய கடைகளை நிர்மாணிப்பதற்காக வாடகையாளர்களிடமிருந்து பெறப்பட்ட பிணை வைப்பு பணமான ரூபா 7,350,000 வைப்புக் கணக்கில் கணக்கீடு செய்யப்படாமையினால் ஐந்தொகையில் வைப்புப் பெறுமதி மேற்கூறப்பட்ட பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீதிமன்றத் தண்டப்பண மீதி ரூபா 213,792 ஆக இருந்த போதிலும், ஐந்தொகையில் நிலுவை நீதிமன்றத் தண்டப்பண

மீதியாக ரூபா 80,292 காண்பிக்கப்பட்டதனால் நிலுவை நீதிமன்றத் தண்டப்பண மீதியான ரூபா 133,500 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | பிரதேச சபை விதி 180 | நிதி, களஞ்சியம் மற்றும் வருமானங்களைச் சேகரித்தல் செயற்பாடுகளில் பொறுப்பாக செயற்படுகின்ற மூன்று உத்தியோகத்தர்களினால் பிணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அரச நிர்வாகச் சுற்றறிக்கை 30/2016 (03.01) | சபைக்குச் சொந்தமான 17 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் நிதி விளைவுகள் ரூபா 4,095,504 மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 4,265,047 தொகையான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானமாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 169,543 வீழ்ச்சியினைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீண்டெழும் வருமானத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைகளுக்கான கட்டணம் போன்ற வருமான மூலங்களில் 13 சதவீதம் முதல் 30 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும், வீத வரியும் வரியும் பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும், ஏனைய வருமானம் மற்றும் மானியம் போன்ற நிதி மூலங்களில் 03 சதவீதம் முதல் 22 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவையும் காண்பித்தது.

மீண்டெழும் செலவினத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளில் 04 சதவீத அதிகரிப்பும், பிரயாணச் செலவினம், வழங்கல் உபகரணங்கள், மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தல், போக்குவரத்து மற்றும் ஓய்வூதியம் போன்ற மூலங்களில் 06 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவையும் காண்பித்திருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | 2016 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2016 ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| வீதவரியும் வரியும் | 1,578,956 | 1.623,639 | 1.783,805 |
| வாடகை வருமானம் | 5.926,450 | 5.835,636 | 30,855 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,346,500 | 1,565,378 | 78,450 |
| சேவைகளுக்கான கட்டணம் | 765,000 | 527,055 | - |
| தண்டப்பணமும் பிடியாணைக் கட்டணமும் | 1,253,000 | 892,480 | 80,292 |
| ஏனைய வருமானம் | 390,000 | 323,523 | - |

### 2.3.2 வீதவரியும் வரியும்

சபையினால் இறுதித் தடவையாக ஆதனவரி மதிப்பீடு 2011 ஆம் ஆண்டில் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த ஆண்டின் ஆதனவரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போதும் ஆதனவரி அறவிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆதனவரி பதிவேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்படாத ஆதனவரி பெறுமதி ரூபா 1,783,805 ஆக இருந்ததுடன் அந்தப் பணத்தை அறவிடுவதற்காக சபையால் செயல்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 46,000 தொகை பெறவேண்டியதாகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த நவாறா கெப் வண்டியின் பதிவு செய்தல் குறித்த திகதியில் மேற்கொள்ளப்படாமையினால் 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தண்டப்பணமாக ரூபா 155,650 தொகையைச் செலவிட வேண்டியிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமாக காணப்படுகின்ற 05 வாகனங்களுக்கான வருமான அனுமதிப்பத்திரம் குறித்த திகதியில் பெறப்படாமையினால் ரூபா 11,600 தண்டப் பணத்தைச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(இ) மகாவலி அதிகாரசபை, அரச நிதித் திணைக்களம், உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், கிழக்கு மாகாண அரச சார்பற்ற அமைப்புக்களின் மூலம் வழங்கப்பட்ட 04 வாகனங்களின் உரித்தை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1998 ஆம் ஆண்டின் போது சபையினால் சந்துண்புற கிராமோதய சபைக்கும் நாமல் ஓயா பிரதேச சபைக்கும் வழங்கப்பட்டிருந்த ரூபா 40,000 முற்பணத்தைத் தீர்ப்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பிரதேச சபைக்குச் சொந்தமான 02 கெப் வண்டிகள், நான்கு சக்கர உழவு இயந்திரம் மற்றும் 02 உழவு இயந்திர இழுவைப் பெட்டிகள் என்பன 05 வருட காலம் முதல் 07 வருட காலமான வீச்சில் விளைவற்றுக் காணப்பட்டதுடன் பழுதுபார்க்கக் கூடிய வாகனங்களைப் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 07 சதவீதம் முதல் 171 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய விநியோகிக்கப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபை விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | | கவனம் செலுத்த வேண்டிய துறைகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | சொத்துக்களை கணக்குகளுக்கு கொண்டு வருதல். |
| (ஆ) | வருமான நிர்வாகம் | i. நிலுவை வருமானத்தை அறவிடுதல். |
| | | ii. உப விதிகளை விதித்தல் |
| | | iii. வருமான மூலங்களை இனங்காணல் |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டு மதிப்பீட்டை நிறைவேற்றுதல். |
| (ஈ) | களஞ்சிய நிர்வாகம் | விரைவாக சரி பிழைகளை கண்டறியக்கூடிய முறையில் பொருட்களை களஞ்சியப்படுத்தல் |
| (உ) | சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்களின் உரித்தை கையேற்றல் |